ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1956/25 - 2016 මාර්තු මස 02 වැනි බදාදා - 2016.03.02

*1956/25 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 02 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி IV (அ) - மாகாண சபைகள்

### மாகாண சபை அறிவித்தல்கள்

**மத்திய மாகாண மாகாண சபை**

*2015 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, மத்திய மாகாண மாகாண சபையின் முன் பிள்ளை அபிவிருத்தி நியதிச் சட்டம்*

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் மத்திய மாகாண மாகாண சபையினூடாக 2015.11.17 ஆந் திகதி நிறைவேற்றப்பட்டு 2015.12.04 ஆந் திகதி கௌரவ ஆளுநரினால் அனுமதி வழங்கப்பட்ட மேற்படி நியதிச் சட்டத்தை அனைவரினதும் அறிவுறுத்தலுக்காக இத்தால் பிரசுரிக்கின்றேன்.

சரத் ஏக்கநாயக்க,
மத்திய மாகாண முதலமைச்சர் மற்றும் நிதியும்
திட்டமிடலும், சட்டமும் ஒழுங்கும், உள்ளூராட்சி மற்றும்
மாகாண நிர்வாகம், மனிதவளம், கல்வியும் கலாசார
விவகாரங்களும், சுற்றுலாத்துறை, காணி, வர்த்தகமும் வாணிபமும்,
உணவு விநியோகமும் பகிர்ந்தளிப்பும், முதலீட்டு தொடர்பிணைப்பு
மற்றும் ஏனைய அமைச்சுகளுக்குக் கீழ் சேர்த்துக் கொள்ளப்படாத
விடயங்கள் சம்பந்தமான அமைச்சர்.

முதலமைச்சர் அலுவலகம்,
மத்திய மாகாண மாகாண சபை,
கண்டி,
2016, பெப்புருவரி 12.

**மத்திய மாகாண மாகாண சபையின் 2015 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, முன்பிள்ளை பருவ அபிவிருத்தி நியதிச் சட்டம்**

முதலமைச்சு மற்றும் நிதியும் திட்டமிடலும், சட்டமும் ஒழுங்கும், உள்ளூராட்சி மற்றும் மாகாண நிர்வாக, மனித வள,
கல்வி மற்றும் கலாசார அலுவல்கள், சுற்றுலா, காணி, வர்த்தகமும் வாணிபமும், உணவு விநியோகம் மற்றும் பகிர்ந்தளிப்பு
நடவடிக்கைகள், முதலீட்டு தொடர்பிணைப்பு மற்றும் வேறு அமைச்சுகளுக்கு தொடர்பற்ற விடயங்கள்
தொடர்பான அமைச்சு.

இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**மத்திய மாகாண மாகாண சபையின் 2015 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, முன்பிள்ளை பருவ அபிவிருத்தி நியதிச் சட்டம்**

மத்திய மாகாணத்தில் முன் பிள்ளை பருவ அபிவிருத்தி பிரிவொன்றை நிறுவுவதற்காகவும் முன் பிள்ளை பருவ அபிவிருத்தி மத்திய நிலையங்களை பதிவு செய்தல், கண்காணிப்பு செய்தல், நிர்வாகம் செய்தல் மற்றும் நடாத்திச் செல்லல் என்பவற்றுக்கும் அது தொடர்பான அல்லது அதற்கு சமனான விடயங்களுக்கான ஏற்பாடுகள் செய்வதற்கும் மத்திய மாகாண சபையில் 1990 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க கல்வி நியதிச் சட்டம் II ஆவது பிரிவின் 12 (2) (xii) ஆவது உப பிரிவை தளர்த்துவதற்கான ஏற்பாடுகள் செய்வதற்கான நியதிச் சட்டமாகும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் மத்திய மாகாண மாகாண சபையால் இவ்வாறு விதந்துரைக்கப்படுகிறது.

*ஆவணத்தின் பெயர் மற்றும் நடைமுறையாகும் தினம்.*

1. இந் நியதிச்சட்டம் 2015 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, மத்திய மாகாண முன் பிள்ளை பருவ அபிவிருத்தி நியதிச் சட்டம் என அழைக்கப்படுவதுடன் மத்திய மாகாண ஆளுநர் அவர்கள் அங்கீகாரம் வழங்கும் தினத்தில் இருந்து நடைமுறைப்படுத்தப்படும்.

2. 1990 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க கல்வி நியதிச் சட்டம் 12 (2) (xii) உப பிரிவுகள் இதன் மூலம் இரத்துச் செய்யப்படுகின்றன.

## I ஆவது பகுதி

**முன் பிள்ளை பருவ அபிவிருத்தி பிரிவு ஒன்றை நிறுவுதல்**

*முன் பிள்ளை பருவம்.*

3. பிள்ளை ஒன்றின் முன் பருவ அபிவிருத்தி என இலங்கையில் கருதப்படுவது வயிற்றில் கருக் கொண்டது முதல் ஐந்து வயது வரையான காலப்பகுதியாகும். எனினும் இந்நியதிச்சட்ட ஏற்பாடுகளுக்காக பிறப்பு முதல் முறையான பாடசாலை கல்விக்கு உள்வாங்கப்படும் தினம் வரையான காலப்பகுதி உள்ளடங்கும்.

*மத்திய மாகாண முன் பிள்ளை அபிவிருத்தி பிரிவை நிறுவுதல்.*

4. இந்நியதிச் சட்டத்திற்குள் குறிப்பிட்டு கூறப்பட்டுள்ள நோக்கங்களை நடைமுறைப்படுத்தப்படும் செயற்பாடுகளுக்காக மத்திய மாகாண முன் பிள்ளை பருவ அபிவிருத்தி பிரிவு என அழைக்கப்படும் (இதன் பின்பு "பிரிவு" என குறிப்பிடப்படும்) பிரிவொன்று மத்திய மாகாண பிரதான அமைச்சின் கீழ் நிறுவப்படும்.

*பிரிவுக்காக பணிப்பாளர் ஒருவரை நியமித்தல்.*

5. இங்கு இதன்பின்னர் "பணிப்பாளர்" என அழைக்கப்படும் ஒருவர் மத்திய மாகாண பிரதான அமைச்சரின் சிபாரிசின் அடிப்படையில் மத்திய மாகாண கௌரவ ஆளுநரினால் நியமனம் செய்யப்படும் அதேவேளை அவரே இப்பிரிவின் தலைவராக செயற்பட வேண்டும். இப்பிரிவிற்கு நியமனம் செய்யப்படும் பணிப்பாளர் மத்திய மாகாணத்திற்குள் சேவையாற்றும் பதவி நிலை சேவை உத்தியோகத்தர் ஒருவராக இருக்க வேண்டும்.

*பணிப்பாளரின் பொறுப்பும் கட்டுப்பாடும்.*

6. (1) (அ) இந்த நியதிச் சட்டத்தின் நோக்கங்களை அடையப் பெற்றுத்தருவது பணிப்பாளரின் பொறுப்பாக அமைவதோடு முகாமைத்துவ சபையின் மேற்பார்வை மற்றும் நிர்வாகத்தின் கீழ் பணிப்பாளர் செயற்பட வேண்டும் ;

(ஆ) பணிப்பாளருக்கு மிக நெருங்கிய மேற்பார்வை அதிகாரி மாகாண பிரதான அமைச்சின் செயலாளராகும் ;

*பணிப்பாளரின் பதவிக் காலம்.*

(2) இறப்பு, இராஜினாமா, பதவியில் இருந்து நீக்குதல் அல்லது முன்னைய பதவியை கைவிட்டாலோ தவிர நியமனத் திகதியில் இருந்து 3 வருடங்கள் பணிப்பாளருக்கு பதவி வகிக்கலாம் .

*பணிப்பாளர் பதவிக்கு மீள நிய மித்தல்.*

(3) (2) உப பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஒருவராக இல்லாவிடில் பணிப்பாளர் மீண்டும் நியமிக்கப்பட தகுதியானவராகும்.

(4) பணிப்பாளர் பதவியில் ஏதும் வெற்றிடம் ஏற்படுமாயின் புதிய பணிப்பாளர் தெரிவு செய்யப்படவேண்டிய அதேவேளை அவ்வாறு நியமிக்கப்படும் வரை பிரதான அமைச்சின் செயலாளர் அல்லது அவரால் பெயரிடப்படும் பதவிநிலை உத்தியோகத்தர் ஒருவர் அப்பதவியின் எஞ்சிய காலத்திற்கான செயற்பாடுகளை நடாத்திச் செல்வதற்காக நியமிக்கப்படலாம். பணிப்பாளர் பதவி வெற்றிடமாகுதல்.

7. பிரிவின் நோக்கங்களை நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான ஊழியர்களை மத்திய மாகாண அரச சேவையிலிருந்து நியமனம் செய்யலாம். பிரிவிற்கு ஊழியர்களை நியமித்தல்.

8. பிரிவின் நோக்கங்கள் பின்வருமாறு :- பிரிவின் நோக்கம்.

(1) மாகாணத்தில் முன்பிள்ளை பருவ அபிவிருத்தியையும் கற்பித்தலையும் மேம்படுத்தல்.

(2) முன் பிள்ளை பருவ அபிவிருத்தி மத்திய நிலையங்களை பதிவு செய்தல், முகாமைத்துவம் மற்றும் மேற்பார்வை செய்தல்.

(3) முன் பிள்ளை பருவத்தில் உள்ள சிறுவர்களின் உடல் மற்றும் உள ரீதியிலான முழு விருத்திக்கு அவசியமான சூழலை உருவாக்குதல்.

(4) முன் பிள்ளை பருவத்தில் உள்ள சிறுவர்களின் உரிமைகளை பாதுகாத்து முறையான பாதுகாப்பை வழங்குதல்.

(5) முன் பிள்ளை பருவத்தை அபிவிருத்தி செய்யத் தேவை என உணரப்படும் வேறு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

9. பிரிவின் பணிகள் மற்றும் அதிகாரங்கள் கீழ் வருமாறு :- பிரிவின் பணிகள் மற்றும் அதிகாரங்கள்.

(1) முன் பிள்ளை பருவம் தொடர்பாக மத்திய மாகாணத்தில் தொழிற்படும் அனைத்து நிறுவனங்களையும் பதிவு செய்தல், மேற்பார்வை மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல்.

(2) முன் பிள்ளை பருவ அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னேற்றத் தேவையான வழி காட்டல்கள் மற்றும் உதவிகளைப் பெற்றுக் கொடுத்தல்.

(3) முன் பிள்ளை பருவ அபிவிருத்தி மத்திய நிலைய ஆலோசகர்களுக்கு குறைந்தபட்ச தகுதிகளை நிர்ணயம் செய்தல்.

(4) முன் பிள்ளை பருவ அபிவிருத்தி மத்திய நிலையங்களில் ஆலோசகர்களுக்கான பயிற்சிகளை வழங்குதல்.

(5) முன் பிள்ளை பருவ அபிவிருத்தி மத்திய நிலையங்களில் ஆலோசகர்களை பயிற்றுவித்தல் மற்றும் அபிவிருத்திக்காக பயிற்சி நிறுவனங்களை நடாத்திச் செல்லல் மற்றும் தொழில் திறன்களின் அடிப்படையில் மதிப்பீடுகள் செய்து சான்றிதழ்கள் வழங்கல்.

(6) முன் பிள்ளைப் பருவ அபிவிருத்தி மத்திய நிலையங்களின் தற்போதைய சேவை வசதிகள் மற்றும் ஊழியர்களை கணிப்பீடு ஒன்றுக்கு உற்பத்தி மதிப்பீடுகளை வழங்குதல்.

(7) தேசிய நியமங்களுக்கு அமைவாக முன் பிள்ளை அபிவிருத்தி மத்திய நிலையங்களின் நிர்வாகம் மற்றும் முகாமைத்துவம் தொடர்பாக குறைந்தபட்ச நியமங்களை நிர்ணயம் செய்தல்.

(8) முன் பிள்ளைப் பருவ அபிவிருத்தியின் முக்கியத்துவம் தொடர்பாக மக்களுக்கு தெளிவுபடுத்தல்.

(9) மாகாணத்திற்குள் நடாத்திச் செல்லப்படும் எந்தவொரு முன் பிள்ளைப் பருவ அபிவிருத்தி நிலையமும் இந்நியதிச் சட்ட ஏற்பாடுகளுக்கு இணக்கமற்று இருக்குமானால் அம் மத்திய நிலையத்தை தற்காலிகமாக இடைநிறுத்தம் செய்தல் அல்லது நிறுத்துதல்.

(10) பிரிவினால் வழங்கப்படும் யாதேனும் சேவைக்காக கட்டணம் அல்லது பணம் அறவிடல்.

(11) மத்திய நிலையமொன்றினால் பேணப்பட வேண்டும் என நிர்ணயம் செய்யப்படும் புத்தகங்கள், எழுத்து ஆவணங்கள் மற்றும் மாதிரி படிவங்களை அறிமுகப்படுத்தலும் அவற்றை பயன்படுத்த வழிவகைகளை செய்தலும்.

(12) முன்பிள்ளை பருவ அபிவிருத்தியுடன் தொடர்புடைய நடவடிக்கைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக வெளி நபர்களுடன் ஒருங்கிணைப்புகளை பேணுதல்.

(13) விசேட தேவையுடைய குழந்தைகள், அவர்களின் பெற்றோர் மற்றும் மக்களுக்காக பொருத்தமான வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.

(14) மத்திய நிலையங்களுக்கு உள்வாங்கள் மற்றும் அவை முறையான தரத்துடன் நடாத்திச் செல்லப்படுகிறதா என பரீட்சித்தல்.

(15) முன் பிள்ளை அபிவிருத்தி மாகாண மன்றங்கள், மாவட்ட மன்றங்கள் மற்றும் பிரதேச மன்றங்கள் மட்டத்தில் முன் பிள்ளை அபிவிருத்தி மத்திய நிலையங்களை அமைத்தல், மேற்பார்வை மற்றும் முகாமைத்துவம் மற்றும் அதனுடன் தொடர்புடைய நடவடிக்கைகள்.

(16) மத்திய மாகாணத்திற்குள் முன் பிள்ளைப் பருவ அபிவிருத்திக்கு அவசியப்படும் வேறு செயற்பாடுகள் மற்றும் அதிகாரங்கள்.

## II ஆவது பகுதி

### முகாமைத்துவ மற்றும் ஆலோசனை குழுக்களை நியமித்தல்

முகாமைத்துவ மற்றும் ஆலோசனைக் குழுக்கள்.

10. இந்நியதிச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக (இங்கு இதன் பின்னர் "குழு" என அழைக்கப்படும்) முகாமைத்துவ குழு ஒன்றும் ஆலோசனைக் குழு ஒன்றும் நிறுவப்பட வேண்டும்.

முகாமைத்துவக் குழு.

11. பிரிவின் பணிகளை வழி நடத்த மற்றும் மேற்பார்வை செய்ய பதின்மூன்று நபர்கள் உள்ளடங்கிய "முகாமைத்துவக் குழு" என அழைக்கப்படும் குழு ஒன்று மாகாண பிரதான செயலாளரினால் நியமிக்கப்படும்.

முகாமைத்துவக் குழு அங்கத்துவம்.

12. முகாமைத்துவக்குழு கீழே குறிப்பிடப்பட்டுள்ள அங்கத்தவர்களை உள்ளடக்கியதாக அமைய வேண்டும்:-

(1) மாகாண பிரதான அமைச்சின் செயலாளர் ;
(2) மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ;
(3) மாகாண கல்விப் பணிப்பாளர் ;
(4) உள்ளூராட்சி ஆணையாளர் ;
(5) மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ;
(6) மாகாண நன்னடத்தைகள் மற்றும் சிறுவர் பராமரிப்பு ஆணையாளர் ;
(7) மாகாண சமூக சேவைகள் பணிப்பாளர் ;
(8) தேசிய சிறுவர்கள் செயலாளர் காரியாலயத்தின் பணிப்பாளர் அல்லது அவரால் பெயரிடப்படும் பிரதிநிதியொருவர் ;
(9) பிரதி பொலிஸ் மா அதிபர் அல்லது அவரினால் பெயரிடப்படும் பிரதிநிதியொருவர் ;
(10) பெருந்தோட்ட மனித அபிவிருத்திக்கு பொறுப்பான பணிப்பாளர் அல்லது அவரினால் பெயரிடப்படும் பிரதிநிதி ;
(11) முன் பிள்ளை பருவ அபிவிருத்திப் பிரிவின் பணிப்பாளர் ;
(12) பிரதான அமைச்சரினால் துறையுடன் தொடர்புடையதாக பெயரிடப்படும் அங்கத்தவர்.

13. பிரதான அமைச்சின் செயலாளர் உத்தியோகபூர்வ அதிகாரத்தால் முகாமைத்துவ குழுத் தலைவராக வேண்டியதுடன் பிரிவின் பணிப்பாளர் முகாமைத்துவ குழுவின் செயலாளராக செயற்பட வேண்டும். பிரதான அமைச்சின் செயலாளர் இல்லாத சந்தர்ப்பங்களில் ஏனைய அங்கத்தவர்களில் ஒருவர் அக்கூட்டத்தின் செயற்பாடுகளை வழிநடத்தி செல்ல மாத்திரம் தலைவராக நியமிக்கப்பட வேண்டும். முகாமைத்துவக் குழுத் தலைவர் மற்றும் செயலாளர்.

14. முகாமைத்துவக் குழுவால் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பணிகள் மற்றும் அதிகாரங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் :- முகாமைத்துவக் குழுவின் பணிகள் மற்றும் அதிகாரங்கள்.

(1) இந்த நியதிச் சட்டத்துடன் தொடர்புடைய செயற்பாடுகளை நிறைவேற்றிக்கொள்ள தேவையான கொள்கை விளக்கமொன்று தயாரிக்கப்பட்டு பிரதான அமைச்சர் ஊடாக மாகாண சபைக்கு முன்வைத்தல் ;

(2) இந்நியதிச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பணிகள் மற்றும் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கு அவசியமான விதிமுறைகள் மற்றும் சுற்றுநிருபங்கள் விதிப்பின் போதும் அவை நடைமுறைப்படுத்தும் போதும் அவசியமான ஆலோசனைகள் வழங்கல் ;

(3) முன் பிள்ளைப் பருவ அபிவிருத்தி விடயம் தொடர்பில் அரச மற்றும் அரச சார்பற்ற தரப்பினருக்கு மாகாணத்திற்குள் செயற்படுவதற்கு அவசியமான ஆலோசனைகள் மற்றும் அனுமதியை வழங்கல் ;

(4) இந் நியதிச் சட்டத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கு பிரிவுக்கு அவசியமாக அறிவுறுத்தல்களை வழங்குதல் ;

(5) பிரிவின் பணிகளை நடைமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வைக்கு அவசியமான ஏனைய அறிவுறுத்தல்கள் மற்றும் வழிகாட்டல்களை வழங்கல்.

15. (1) முகாமைத்துவ குழுக்கூட்டத்தின் குறைந்தபட்ச எண்ணிக்கை ஏழு ஆவதுடன் வருகை தந்திருக்கும் அங்கத்தவர்களின் பெரும்பான்மை விருப்பின் பெயரில் தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். அங்கத்தவரின் விருப்புகள் சம நிலையில் காணப்படும் சந்தர்ப்பங்களில் குழுத் தலைவருக்கு நடுவர் வாக்கு ஒன்று வழங்கப்படல் வேண்டும். முகாமைத்துவக் குழுவின் தீர்மானங்கள்.

(2) பிரதான அமைச்சு மற்றும் கல்வி அமைச்சு வெவ்வேறு அமைச்சின் கீழ் கொண்டுவரப்படும் சந்தர்ப்பங்களில் இவ்வமைச்சின் செயலாளருக்கு இரண்டு வாக்குகள் உரித்தாகும்.

16. முகாமைத்துவ குழுவின் பணிகளை நடாத்திச் செல்வதற்கு அவசியமான அறிவுறுத்தல்கள் மற்றும் வழிகாட்டல்கள் வழங்குவதற்காக பத்தொன்பது பேரை உள்ளடக்கிய ''ஆலோசகர் குழு'' எனப்படும் குழு ஒன்று நியமிக்கப்பட வேண்டும். ஆலோசகர் குழு.

17. (1) ஆலோசகர் குழுவின் உத்தியோகபூர்வ அதிகாரங்கள் அங்கத்தவர்கள் பதினைந்து பேருடன் மற்றும் பிரதான அமைச்சரினால் பெயரிடப்படும் முகாமைத்துவ குழு அங்கத்தவர் தவிர்ந்த அங்கத்தவர்கள் நான்கு பேரை உள்ளடக்கியதாக அமைய வேண்டும். ஆலோசகர் குழு அங்கத்தவர்கள் நியமனம் பிரதான அமைச்சரினால் மேற்கொள்ளப்படும். ஆலோசகர் குழுவின் அங்கத்துவம்.

(2) ஆலோசகர் சபைக்கு உத்தியோகபூர்வ அதிகாரத்தால் தெரிவாகும் அங்கத்தவர்கள் கீழ்வருமாறு அமைய வேண்டும் :-

(அ) மத்திய மாகாண பிரதான செயலாளர் ;

(ஆ) மாகாண பிரதான அமைச்சின் செயலாளர் ;

(இ) மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ;

(ஈ) மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் ;

(உ) மத்திய மாகாணத்திற்குள் இருக்கும் மாவட்ட செயலாளர்களில் ஒருவர் ;

(ஊ) பிரதி பிரதான செயலாளர் (நிதி) ;

(எ) மாகாணத்திற்கு பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபர் ;

(ஏ) மாகாண கல்விப் பணிப்பாளர் ;

(ஐ) தேசிய சிறுவர்கள் செயலாளர் காரியாலயத்தின் பணிப்பாளர் அல்லது அவரால் பெயரிடப்படும் பிரதிநிதியொருவர் ;

(ஒ) பேராதெனிய பல்கலைக்கழக உப பீடாதிபதியினால் பெயரிடப்படும் நிரந்தர ஊழியர்களில் பிரதிநிதி ஒருவர் ;

(ஓ) பெருந்தோட்ட மனித அபிவிருத்திக்கு பொறுப்பான பணிப்பாளர் அல்லது அவரினால் பெயரிடப்படும் பிரதிநிதி ;

(ஔ) மத்திய மாகாண கல்வித் திணைக்களத்தின் ஆரம்பக் கல்வி விடயப் பொறுப்பான பணிப்பாளர்;

(க) மத்திய மாகாண மூன்று மாவட்டங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் முன் பிள்ளைப் பருவ அபிவிருத்தி மாவட்ட மன்ற தலைவர்கள் மூவர்.

(3) ஆலோசகர் குழுவிற்கு அமைச்சரினால் பெயரிடப்படும் அங்கத்தவர்கள் கீழ் வருமாறு அமைய வேண்டும்:-

(அ) முன் பிள்ளைப் பருவ அபிவிருத்தி தொடர்பாக சிறந்த அறிவு கொண்ட ஒரு பிரதிநிதி ;

(ஆ) மத்திய மாகாணத்திற்குள் முன் பிள்ளைப் பருவ அபிவிருத்தி தொடர்பான பணிகளில் ஈடுபட்ட ஒரு பிரதிநிதி ;

(இ) மத்திய மாகாணத்திற்குள் முன் பிள்ளைப் பருவ அபிவிருத்தி விடயம் தொடர்பாக இயங்கும் அரச சார்பற்ற நிறுவனமொன்றின் அல்லது இலங்கைக்குள் ஏற்றுக்கொள்ளப்பட்ட வெளிநாட்டு அங்கத்துவ நிறுவனங்களின் பிரதிநிதிகள் இருவர் ;

ஆலோசனைக் குழுவின் தலைவர் மற்றும் செயலாளர்.

18. மாகாண பிரதான செயலாளர் ஆலோசனைக்குழுவின் தலைவராவதுடன் பிரதான அமைச்சின் செயலாளர் ஆலோசனைக்குழுவின் செயலாளராக செயற்படுவார்.

ஆலோசனைக் குழுவின் அதிகார காலம்.

19. ஆலோசனைக்குழுவின் அதிகார காலம் 03 வருடங்களாகும்.

ஆலோசனைக் குழுவை நடாத்திச் செல்லல்.

20. நியதிச் சட்டத்தின் ஏனைய ஏற்பாடுகளுக்கு உட்பட்டதாக ஆலோசனைக்குழுவை நடாத்திச் செல்வதற்காக தேவைப்படும் விடயங்கள் தொடர்பாக செயன்முறைகள் ஆலோசனைக்குழுவினால் தயாரித்துக்கொள்ள வேண்டும்.

ஆலோசனைக் குழுவின் பணிகள் மற்றும் செயற்பாடுகள்.

21. இந் நியதிச்சட்டத்தின் நோக்கங்கள் மற்றும் குறிக்கோள்களை அடைந்துக்கொள்வதற்கு தேவையான ஆலோசனை சேவையை முகாமைத்துவக் குழுவுக்கு வழங்குவது ஆலோசகர் குழுவின் கடமைப் பாங்காகும்.

குழுக்களின் அங்கத்தவர் பதவிக் காலம்.

22. குழுவில் பெயரிடப்பட்ட அங்கத்தவர் ஒருவர் இறப்பு, ராஜினாமா, பதிவியில் இருந்து நீக்கப்படுதல் அல்லது முன்னைய பதியை கைவிட்டாலோ தவிர மூன்று வருடங்கள் பதவி வகிக்க வேண்டும்.

குழுக்களின் அங்கத்துவர் பதவியை இழத்தல்.

23. குழுவுக்கு பெரியடப்பட்ட அங்கத்தரவர் ஒருவர் ஏற்றுக்கொள்ள முயுமான காரணமில்லாமல் தெரியப்படுத்தாமல் குழுவின் மூன்று கூட்டத்திற்கு தொடர்ச்சியாக சமுகமளிக்காவிட்டால் அவ் அங்கத்தவர் பதவியை விட்டுச் சென்ற ஒருவராக கருதப்பட வேண்டிய அதேவேளை குழுவின் செயலாளர் அது தொடர்பாக பிரதான அமைச்சருக்கு அறிவித்த பின்னர் அதற்கு பொருத்தமான பதில் உத்தியோகத்தர் பிரதான அமைச்சரினால் நியமிக்கப்பட வேண்டும்.

குழுக்களின் அங்கத்தவர் பதவியிலிருந்து நீக்கப்படல்.

24. குழுவில் பெயரிடப்பட்ட அங்கத்தவர் ஒருவர் எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் பிரதான அமைச்சரினால் எழுத்து மூலமாக தெரியப்படுத்திய பின்னர் குழு அங்கத்துவத்திலிருந்து நீக்கப்படலாம்.

குழுக்களின் அங்கத்தவர் பதவியிலிருந்து இராஜினாமா செய்தல்.

25. குழுவில் பெயரிடப்பட்ட அங்கத்தவர் ஒருவர் தமது பதவியிலிருந்து இராஜினாமா செய்வதாக பிரதான அமைச்சருக்கு எழுத்துமூலமாக அறிவிக்க முடியுமான அதேவேளை அவ் இராஜினாமா பிரதான அமைச்சரினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்னர் அமுலாகும்.

26. குழுவின் அங்கத்தவர் ஒருவர் இறத்தல், இராஜினாமா பதவியிலிருந்து நீக்கப்படல் அல்லது வேறு வழிகளில் பதவி வெற்றிடமாகும் சந்தர்ப்பங்களில் பிரதான அமைச்சரினால் 12 மற்றும் 17 ஆம் பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் கருத்திற் கொள்ளப்பட்டு அந்த அங்கத்தவரின் பதில் உத்தியோகத்தர் ஒருவர் நியமனம் செய்யப்பட வேண்டும். அவ்வாறு நியமனம் செய்யப்படும் நபர் யாருடைய பதிலாள் ஆவாரோ அவரின் காலத்தில் இல்லாமல் எஞ்சியுள்ள காலத்திற்கு பதவி வகிக்க வேண்டும். குழுக்களின் அங்கத்தவர்பதவி வெற்றிடமாகுதல்.

27. குழுவின் அங்கத்தவராக ஒரு முறை பெயரிடப்பட்டவர் மீண்டும் ஒருமுறை குழுவின் அங்கத்தவராக பெயரிடப்படலாம். குழுக்களின் அங்கத்தவர் பதவிக்காக மீள நியமித்தல்.

28. குழு ஆக குறைந்தது 3 மாதத்திற்கு ஒரு முறையாவது கூட வேண்டும். குழுவின் கூட்டம்.

29. யாரேனும் ஒரு நபர், குழுக்களின் அங்கத்தவர் பதவிக்கு தகுதி யற்றவராகுதல்.

(1) இலங்கை பிரஜையாக இல்லாவிடின் அல்லது பிரஜா உரிமை நிருத்தப்படுமானால்,

(2) இலங்கையிலோ அல்லது வெளிநாடு ஒன்றிலோ அமுலாகும் சட்டத்தின் கீழ், மனநிலை பாதிப்பு அல்லது வங்குரோத்து நிலைமையை அடைந்திருப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தால் அல்லது ;

(3) இலங்கையிலோ அல்லது வெளிநாடு ஒன்றிலோ நீதிமன்றத்தினால் விதிக்கப்படும் சிறைத் தண்டனை அனுபவித்தவராகவோ அல்லது அனுபவித்து இருப்பவராகவோ அல்லது 1500 ரூபாவுக்கு குறையாத தண்டப்பணத்தால் தண்டனை பெற்றிருப்பாராயின் அல்லது ;

(4) குழுவின் அங்கத்தவராக அவரினால் பணிகள் நிறைவேற்றப்படும் போது பாதகம் விளைவிக்கும் தாக்கங்களுக்கு வாய்ப்பளிக்கும் பண ரீதியான அல்லது வேறு தொடர்பு ஒன்று இருப்பதாக பிரதான அமைச்சரின் கருத்தாக இருந்தாலோ அல்லது;

(5) இந்த நியதிச் சட்டத்தின் கீழ் ஒரு குற்றத்துக்கு குற்றவாளியாக்கப்பட்டால் ;

குழுவின் அங்கத்தவராக நியமிக்கப்படவோ அல்லது செயற்படுவதற்கோ தகுதியற்றவராவார்.

30. குழுவின் ஏதும் ஒரு நடவடிக்கை, தீர்மானம் அல்லது சட்டப் பணிகள் குழுவின் வெற்றிடம் அல்லது அதன் அங்கத்தவர் ஒருவரின் நியமனத்தில் உள்ள குறைப்பாட்டின் காரணமாக செல்லுபடியற்றதாக கருதப்படல் கூடாது. குழுவின் செயற் பாடு ஒன்று செல்லுபடியற்ற தாக மாறுதல்.

31. குழுவின் அங்கத்தவர்களுக்கு ஆளுநரின் அனுமதியுடன் பிரதான அமைச்சரின் மூலம் பரிந்துரைக்கப்படும் கொடுப்பனவு ஒன்று வழங்கப்படலாம். குழுக்களின் அங்கத்துவத்துக்கு ஊதியம் வழங் கல்.

## III ஆவது பகுதி

### மத்திய மாகாண முன் பிள்ளைப் பருவ அபிவிருத்திப் பிரிவின் நிதி மற்றும் கணக்கியல் செயற்பாடுகள்

32. (1) மத்திய மாகாண முன் பிள்ளை பருவ அபிவிருத்தி பிரிவுக்காக மாகாண திறைசேரியின் ஒழுங்கு விதிகளுக்கு அமைவாக தனியான கணக்கு ஒன்று பேணப்படவேண்டிய அதேவேளை அதற்கு கீழே குறிப்பிடப்படும் கிடைப்பனவுகள் அக்கணக்கில் வைப்பிலிடப்பட வேண்டும். முன் பிள்ளைப் பருவ அபி விருத்தி நிதியம்.

(அ) பிரிவுக்காக மாகாண சபையால் காலத்துக்குக் காலம் வழங்கப்படும் எல்லா நிதிகளும் ;

(ஆ) பிரிவுக்காக அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் மூலம் வழங்கப்படும் நிதிகள் ;

(இ) பிரிவினால் தமது பணிகளை நிறைவேற்றுவதன் மூலம் சேகரிக்கப்படும் நிதிகள் ;

(ஈ) ஏனைய உதவிகள் மற்றும் அன்பளிப்புகள் .

(2) பிரிவின் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு தேவையான நிதி முகாமைத்துவ சபையால் தீர்மானிக்கப்படும் முறையில் பயன்படுத்தப்பட வேண்டும்.

(3) ஒவ்வொரு நிதியாண்டிற்காகவும் வருமானம், செலவு மற்றும் ஏனைய அனைத்து கொடுக்கல் வாங்கல்களை உள்ளடக்கியதாக வருடாந்த நிதிக்கூற்று ஒன்று தயாரிக்கப்பட வேண்டும். முன்னைய ஆண்டின் கணக்கறிக்கைகள் ஒவ்வொரு ஆண்டும் மாச்சு 31 ஆந் திகதிக்கு முன் விடய பொறுப்புக்குரிய அமைச்சரினால் மாகாண சபைக்கு முன் வைக்கப்பட வேண்டும்.

நிதியத்தின் நிதியாண்டு.

33. பிரிவின் நிதியாண்டு சனவரி 01 ஆந் திகதி தொடக்கம் திசெம்பர் 31 ஆந் திகதிவரையான காலப்பகுதியாக இருக்க வேண்டும்.

நிதியத்தின் கணக்காய்வு.

34. கணக்காய்வாளர் நாயகத்தால் ஒவ்வொரு வருடமும் மாகாண பிரிவில் கணக்காய்வு செய்யப்பட வேண்டும்.

## IV ஆவது பகுதி

### மத்திய நிலையங்களை பதிவு செய்தல்

மத்திய நிலையங் களைப் பதிவு செய்தல்.

35. இந்த நியதிச்சட்டம் அமுலாக்கப்பட்ட திகதியிலிருந்து மற்றும் அதன் பின்னர் இந்நோக்கத்திற்காக இந்நியதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் பதிவு செய்யப்படாத மாகாணத்திற்குள் எந்தவொரு மத்திய நிலையமும் நடாத்தி செல்லப்படக்கூடாது.

தற்போது செயற் படும் மத்திய நிலையங்களை பதிவு செய்தல்.

36. (1) இந்த நியதிச்சட்டம் நடைமுறைக்கு வரும் நாள் தொடக்கம் மாகாணத்தில் செயற்படும் அனைத்து முன் பிள்ளை பருவ அபிவிருத்தி மத்திய நிலையங்களும் பிரிவின் கீழ் பதிவு செய்யப்பட வேண்டும்.

(2) இந்த நியதிச்சட்டம் நடைமுறைக்கு வரும் நாளில் இருந்து மூன்று மாதத்திற்குள், நடாத்திச் செல்லப்படும் அனைத்து மத்திய நிலையத்தினதும் உரிமையாளர் அல்லது முகாமையாளர் அல்லது நிர்வாகி அம் மத்திய நிலையங்களை பதிவு செய்வதற்காக பணிப்பாளருக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

(3) (2) ஆம் உப பிரிவின்படி விண்ணப்பிக்கத் தவறும் குறித்த உரிமையாளர் அல்லது முகாமையாளர் அல்லது நிர்வாகி நியாயமான மற்றும் ஒரே முறையில் பார்க்கும் போது தீர்மானிக்க முடியுமானதுமான காரணத்துடன் வேண்டுகோள் விடுக்கும் பட்சத்தில் கடந்த காலத்தை கருத்தில் கொண்டு பணிப்பாளரால் ஒரு கட்டணம் அறிவிடப்பட்டு பதிவு செய்ய முடியும்.

(4) மேலே (2) அல்லது (3) ஆம் பிரிவுகளின் கீழ் பதிவு செய்வதற்காக விண்ணப்பம் செய்யும் முன் பிள்ளை அபிவிருத்தி மத்திய நிலையமொன்றுக்கு இருக்க வேண்டிய மனித மற்றும் பௌதீக வளங்களின் நியமங்கள் முறையாக இல்லாவிடின், அவ்வாறான நிறுவனத்திற்கு குறித்த நியமங்களை பூரணப்படுத்திக்கொள்ள 3 வருட நிவாரண காலம் ஒன்று மற்றும் தற்காலிக பதிவொன்றும் வழங்கப்படலாம்.

புதிதாக ஆரம் பிக்கப்படும் மத்திய நிலையங்களை பதிவு செய்தல்.

37. இந்த நியதிச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படும் தினத்திலிருந்து புதிதாக ஆரம்பிக்கப்படும் மத்திய நிலையங்கள் ஆரம்பிக்கப்பட முன்னர் பணிப்பாளருக்கு விண்ணப்பித்து பதிவு செய்துகொள்ள வேண்டும்.

பதிவு செய்தல் மற்றும் பதிவை புதுப்பித்தல் என்பவற்றிற்கு தகைமைகள் மற்றும் கட்டணங்கள்.

38. (1) மத்திய நிலையம் ஒன்றை பதிவு செய்வதற்கு மற்றும் பதிவை புதுப்பிப்பதற்குத் தேவையான தகைமைகள் மற்றும் ஏனைய ஏற்பாடுகள் அமைச்சரால் ஒழுங்குவிதிகள் மூலம் தீர்மானிக்கப்படும்.

(2) மத்திய நிலையங்களை பதிவு செய்தல் மற்றும் பதிவை புதுப்பித்தல் என்பவற்றுக்காக விண்ணப்பதாரி பணிப்பாளரினால் தீர்மானிக்கப்படும் கட்டணத்தை செலுத்த வேண்டும்.

(3) பதிவு செய்யும் காலத்தை நீடிப்பதற்கும், பதிவு தாமதமாகும் காலப்பகுதிக்கும் மேலதிகக் கட்டணம் ஒன்றை அல்லது தண்டப் பணம் ஒன்றை அல்லது தண்டப் பணம் ஒன்றை அறவிடவும் பிரிவுக்கு அதிகாரம் உண்டு.

39. மத்திய நிலையம் ஒன்றை பதிவு செய்வதற்காக விண்ணப்பம் ஒன்றை முன்வைத்துள்ள சந்தர்ப்பத்தில் அந்த மத்திய நிலையத்தின் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது என பணிப்பாளர் திருப்தி அடைவாராயின், பதிவுச் சான்றிதழை வெளியிட வேண்டிய அதேவேளை பதிவுக்கான தேவைகள் பூர்த்தி செய்யப்படவில்லை என பணிப்பாளர் தீர்மானிப்பாராயின் காரணம் தெரிவித்து விண்ணப்பத்தை நிராகரிக்க வேண்டும். *பதிவுச்சான்றிதழை வெளியிடல்.*

40. (1) பதிவு செய்வதற்கான தகைமைகளை ஏதேனும் ஒரு மத்திய நிலையம் பூர்த்தி செய்யாத சந்தர்ப்பத்தில், அந்த தகைமைகள் மூன்று வருட காலத்திற்குள் பூர்த்தி செய்யப்பட வேண்டும் என நிபந்தனை ஒன்றை உள்ளடக்கியதாக தற்காலிக பதிவுச் சான்றிதழ் ஒன்று வழங்கப்படும். *தற்காலிக பதிவுச் சான்றிதழை வெளியிடல்.*

(2) மூன்று வருட இறுதியில் பதிவுத் தகைமைகள்மேலும் பூர்த்தி செய்யப்படவில்லை என பணிப்பாளருக்கு தெரிய வந்தால் தற்காலிகமாக வழங்கப்பட்ட பதிவுச்சான்றிதழை இரத்துச் செய்யும் அதிகாரம் பணிப்பாளருக்கு உண்டு.

41. (1) 39 ஆவது பிரிவின்படி நிராகரிக்கப்பட்ட விண்ணப்பம் தொடர்பில் நிராகரிப்பை அறிவிப்பு செய்த தினத்தில் இருந்து 30 நாட்களுக்குள் செயலாளருக்கு மேல் முறையீடு செய்யும் வாய்ப்பு உள்ளது. *நிராகரிக்கப் பட்ட விண்ணப்பம் தொடர்பான மேல் முறையீடு.*

(2) அவ்வாறான மேல்முறையீடுகள் கிடைக்கும் போது செயலாளர் முகாமைத்துவக் குழுவிற்கு அதனை செலுத்தி அதன் அவதானிப்புகள் மற்றும் பரிந்துரைகளைப் பெற்று அந்த மேல் முறையீடு தொடர்பில் தமது அவதானிப்புகளை தெரிவித்து பிரதான செயலாளருக்கு மூன்று மாதங்கள் நிறைவடைய முன் சமர்ப்பிக்க வேண்டும்.

(3) செயலாளரினால் சமர்ப்பிக்கப்படும் மேல் முறையீடுகள் தொடர்பில் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் பிரதான செயலாளருக்கு இருப்பதுடன் பிரதான செயலாளரால் எடுக்கப்படும் தீர்மானமே இறுதியும் முடிவானதுமாகும்.

42. (1) 39 ஆவது பிரிவின்படி வெளியிடப்படும் ஒரு பதிவுச் சான்றிதழ் ஒரு வருடத்திற்கு செல்லுபடியாகும் அதேவேளை அப்பதிவுச்சான்றிதழ் காலவதியாக மூன்று மாதங்களுக்கு முன் பதிவை புதுப்பிப்பதற்கான விண்ணப்பங்களை பணிப்பாளருக்கு முன்வைக்க வேண்டும். *வருடாந்த பதிவை மேற்கொள்ளல்.*

(2) ஏதேனும் ஒரு மத்திய நிலையம், குறித்த நியமங்கள் மற்றும் ஏனைய தேவைப்பாடுகளுக்கு அமைவாக நடாத்திச் செல்லப்படவில்லை என பணிப்பாளருக்கு தெரியவரும் சந்தர்ப்பத்தில் பதிவு புதுப்பிப்பை நிராகரிக்கலாம்.

(3) பதிவை புதுப்பித்தல் நிராகரித்தல் தொடர்பாக நிராகரித்தல் அறிவிப்பு செய்யப்பட்ட தினத்திலிருந்து 30 நாட்களுக்குள் செயலாளருக்கு மேன்முறையீடு செய்ய வாய்ப்பு உள்ளது. செயலாளரால் எடுக்கப்படும் தீர்மானங்கள் இறுதியும் முடிவானதுமாகும்.

(4) முறையாக பதிவை புதுப்பிக்காது நடாத்திச் செல்லப்படும் மத்திய நிலையங்கள் இந்நியதிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படாத மத்திய நிலையமாக கருதப்படவேண்டும்.

43. இந்நியதிச் சட்டத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளை மீறி பதிவு செய்யப்படாத மத்திய நிலையமொன்றை நடாத்தி செல்லும் தனிநபர் அல்லது தனிநபர்கள் சபை நியதிச் சட்டத்தின் கீழ் குற்றம் செய்தவராக கருதப்படுவார்.

44. (1) பிரிவினால் பதிவு செய்யப்படும் ஒவ்வொரு மத்திய நிலையத்திற்கும் இலக்கம் ஒன்றுடன் பதிவுச்சான்றிதழ் வெளியிடப்படுவதுடன் அச்சான்றிதழ் மத்திய நிலையத்தில் காட்சிப்படுத்தப்பட வேண்டும். *பதிவு செய்து நடாத்திச் செல்லப்படும் மத்திய நிலையங்கள் பதிவுச் சான்றிதழை காட்சிப் படுத்தல்.*

(2) பிரிவினால் பதிவு செய்யப்படும் மத்திய நிலையங்கள் தொடர்பில் ஒரு கோப்பு பராமரிக்கப்பட வேண்டும்.

(3) பிரிவினால் வெளியிடப்படும் பதிவுச்சான்றிதழ் வேறு ஒரு நபருக்கு பிரிவின்முன் அனுமதியின்றி கையிளிக்க முடியாத அதேவேளை அவ்வாறு கைளிக்கப்படும் பதிவுகள் நிராகரிக்கப்பட்டதும் செல்லுபடியற்றதுமாகும்.

(4) பதிவுச் சான்றிதழ் ஒன்று முறையாக கையிப்பது தொடர்பான ஏற்பாடுகள் அமைச்சரினால் விதிக்கப்படும் ஒழுங்குவிதிகள் ஊடாகவேயாகும்.

*பதிவை இரத்துச் செய்வதற்கான சந்தர்ப்பங்கள்.*

45. குறித்த ஒரு மத்திய நிலையத்துக்கு பதிவுச் சான்றிதழ் வெளியிடப்பட்டாலும் பின்வரும் சந்தர்ப்பங்களில் அதாவது :-

(1) பதிவு செய்வதற்கான அடிப்படைத் தேவைகளில் ஒன்று அல்லது சில மீறப்படல்.

(2) மத்திய நிலையமொன்றின் உரிமை மாற்றப்படும் சந்தர்ப்பத்தில் அதனை பிரிவிற்கு தெரியப்படுத்தி முறையான பதிவுத் திருத்தம் ஒன்றை மேற்கொள்ளாமை,

போன்ற சந்தர்ப்பங்களில் அதன் பதிவுச் சான்றிதழ் முகாமைத்துவக் குழுவின் தீர்மானத்தின்படி இரத்துச் செய்யும் அதிகாரம் பணிப்பாளருக்கு உண்டு.

*பயிற்சி கருத்தரங்குகளை நடாத்தும் நிறுவனங்களை பதிவு செய்தல்.*

46. முன் பிள்ளை அபிவிருத்திக்காக பாடநெறிகள் பயிற்சிக் கருத்தரங்குகளை நடாத்துவதன் மூலம் மாகாணத்திற்குள் செயற்படும் எந்தவொரு அரச அல்லது தனியார் அல்லது அரச சார்பற்ற நிறுவனம் ஒன்று அதற்காக பிரிவின் கீழ் பதிவு செய்யப்பட வேண்டும்.

## V ஆவது பகுதி

## பொது ஏற்பாடுகள்

*ஒழுங்கு விதிகள் மற்றும் நிபந்தனைகள்.*

47. (1) அமைச்சரினால் முகாமைத்துவ சபையின் ஆலோசனைகள் வினவப்பட்டு மத்திய நிலையங்களை பதிவு செய்தல், மத்திய நிலையங்களில் இருக்க வேண்டிய குறைந்தபட்ச நியமங்களை விதிப்பது மற்றும் இந்த நியதிச் சட்டத்தின் பணிகளை மேற்கொள்வதற்குத் தேவையான ஏனைய ஒழுங்குவிதிகள் மற்றும் கட்டளைகள் தயாரிக்கப்படலாம்.

(2) பிரதான அமைச்சரினால் தயாரிக்கப்படும் ஒவ்வொரு ஒழுங்குவிதியும் அல்லது கட்டளையும் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட தினத்திலிருந்து அல்லது அந்தக் கட்டளையை குறிப்பாக குறிப்பிட முடியுமான ஏதேனும் பிற்பட்ட தினத்திலிருந்து நடைமுறைப்படுத்த வேண்டும்.

(3) அமைச்சரினால் தயாரிக்கப்படும் ஒவ்வொரு ஒழுங்குவிதியும் அல்லது கட்டளையும் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பின் ஒரு மாதத்திற்குள் அனுமதிக்காக மாகாண சபைக்கு முன்வைக்கப்பட வேண்டும். மாகாண சபையால் அனுமதி வழங்கப்படாத ஒரு கட்டளை அல்லது ஒரு ஒழுங்குவிதி சம்மதிக்கப்பட்ட தினத்திலிருந்து அந்த ஒழுங்குவிதிக்கு அல்லது கட்டளைக்கு கீழ் முன்னர் மேற்கொள்ளப்பட்ட ஒரு நடவடிக்கைக்கும் பாதகம் ஏற்படாத வண்ணம் தளர்த்தப்பட வேண்டும் என்பதை கருத்திற்கொள்ள வேண்டும். ஏதேனும் ஒழுங்குவிதி அல்லது கட்டளை தளர்த்தப்பட வேண்டும் என கருதப்படும் தினம் பற்றிய விபரம் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட வேண்டும்.

(4) இந் நியதிச் சட்டத்தின் கீழ் தயாரிக்கப்படும் ஒழுங்குவிதிகள் அல்லது கட்டளைகள் மாகாண சபையில் அங்கீகாரம் பெற்ற பின்னர் இந்த நியதிச் சட்டத்தின் கீழ் விதிக்கப்பட்ட ஒன்றாக அதிகாரம்பெறும்.

*அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் அரச ஊழியர்களாகக் கருதப்பட வேண்டும் என்பது.*

48. பிரிவின் அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் குற்றவியல் சட்டத் தொகுப்பின் வரையறைகள் மற்றும் செயற்பாடுகளுக்கு அரசின் சேவையாளர்களாகக் கருதப்பட வேண்டும்.

*இலஞ்ச ஊழல் சட்டத்தின் நடவடிக்கைகளுக்குரிய பிரிவு அட்டவணைப்படுத்தப் பட்டுள்ளமை*

49. பிரிவு இலஞ்ச ஊழல் சட்டத்தின் கீழ் வரையறுக்கப்படும் அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனம் ஒன்றாகக் கருதப்படவேண்டிய அதேவேளை அச்சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் செயற்பட வேண்டும்.

*குற்றங்களும் அபராதங்களும்.*

50. (1) இந்நியதிச் சட்டத்தில் ஏதேனும் பாகம் அல்லது அதன்படி வரையப்பட்ட ஒழுங்குவிதி அல்லது கட்டளை அல்லது ஏதேனும் ஏற்பாடு அல்லது அவ் ஏற்பாட்டை மீறுதல் மற்றும் அந்த ஏற்பாட்டின் அடிப்படையில் செயற்பட அதிகாரம் பெற்ற ஒருவர் கடமையை நிறைவேற்ற இடையூறு செய்தல் இந்த நியதிச் சட்டத்தின் கீழ் தண்டனைக்குரிய குற்றமாகும்.

(2) (1) உப பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றத்தை செய்யும் ஒவ்வொரு நபரும் நீதவான் நீதிமன்றத்தில் நடைபெறும் பரிசீலனை வழக்கில் குற்றவாளியாக்கப்பட்டால், இலங்கையில் அங்கீகாரம் பெற்ற நாணயத்தில் ரூபா பத்தாயிரத்திற்குக் குறையாத அபராதத்திற்கு அல்லது ஆறு மாதத்திற்குக் குறையாத சிறைத் தண்டனைக்கு அல்லது இரண்டிற்கும் உட்படுதல் வேண்டும்.

**பொருள் கோடல்**

சொற்கள் தொடர்பாக இன்னொரு பொருள் தேவைப்படின் மாத்திரம் இந்நியதிச் சட்டத்தில் :-

''மாகாணம்'' என்பது, மத்திய மாகாணமும்,

''ஆளுநர்' என்பது, மத்திய மாகாணத்தின் ஆளுநரும்,

''பிரதான அமைச்சர்''என்பது, மத்திய மாகாணத்தின் பிரதான அமைச்சரும்,

''பிரதான செயலாளர்'' என்பது, மத்திய மாகாணத்தின் பிரதான செயலாளரும்,

''மாகாண சபை'' என்பது, மத்திய மாகாண சபையும்,

''மத்திய நிலையம்'' என்பது, முன்பிள்ளைப் பருவத்தில் உள்ள சிறுவர்களின் திறன் அபிவிருத்தி செய்யும் ஒரு நபர்/ நபர்களைக் கொண்ட குழு அல்லது அவ்வாறான நிறுவனம் மற்றும் முன் பிள்ளைப் பருவத்தில் உள்ள சிறுவர்களை பாராமரிப்பு செய்யும் தின பராமரிப்பு நிலையங்களும்,

''பணிப்பாளர்'' என்பது, இந்நியதிச் சட்டத்தால் பணிப்பாளராக முறையாக நியமிக்கப்பட்ட அதிகாரியும் அவருக்காக செயற்படுவதற்கு முறையாக அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரியும்,

''மாகாண அரச சேவை'' என்பது,, 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, மாகாண சபைச் சட்டத்தின் கீழ்வரும் மாகாண அரச சேவையும்,

''ஆலோசகர்கள்'' என்பது, முன் பிள்ளை அபிவிருத்தி மத்திய நிலையத்தில் திறன் அபிவிருத்தி செயற்பாடுகளில் ஈடுபடுபவர்கள் மற்றும் தோட்டப் புறத்தை அண்டிய மத்திய நிலையங்களில் சேவையாற்றும் சிறுவர் அபிவிருத்தி உத்தியோகத்தர்களும்.

''முகாமையாளர்கள்'' என்பது,, மத்திய நிலையங்களை நடாத்திச் செல்லும் முயற்சியாளர்களும், உரிமையாளர்களும், பராமரிப்பாளர்களும்,

''விசேட சிறுவர்கள்'' என்பது, மத்திய நிலையங்களுக்குச் செல்ல வேண்டிய வயதில் இருக்கும் பார்வை குறைபாடுள்ள, செவிப்புலன் குறைபாடுள்ள, உடல் அங்கவீன தன்மையுள்ள, மந்த மானசீக சிறுவர்கள் போன்ற விசேட சிறுவர்களும்

''மத்திய நிலையங்களை நடாத்திச் செல்பவர்'' என்பது, மத்திய நிலையத்தை நடாத்திச் செல்லும் நபர், முயற்சியாளர், தொண்டர் அமைப்பு அல்லது கூட்டுத்தாபன நிறுவனமும்,

''குறிப்பிட்ட திகதி'' என்பது, இந்நியதிச் சட்டம் ஆளுநரினால் அங்கீகரிக்கப்பட்ட தினமும்,

''முன் பிள்ளை அபிவிருத்தி பிரதேச மன்றம்'' என்பது, பிரதேச செயலாளர் மட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படும் முன் பிள்ளை அபிவிருத்தி மத்திய நிலையங்களில் திறன் அபிவிருத்தி செயற்பாடுகளில் ஈடுபடும் ஆலோசகர்களால் நிறுவப்படும் மன்றங்களும்.

''முன்பிள்ளை அபிவிருத்தி, மாவட்ட மன்றங்கள்'' என்பது, பிரதேச செயலாளர் மட்டத்தில் நிறுவப்படும் மன்றங்களின் தலைவர், செயலாளர் மற்றும் தனாதிகாரி ஆகிய அதிகாரிகளைக் கொண்டு அந்தந்த மாவட்டங்களில் நிறுவப்பட்ட மன்றங்களும்,

''முன் பிள்ளை அபிவிருத்தி மாகாண மன்றம்'' என்பது, மாவட்ட மன்றங்களின் தலைவர், செயலாளர் மற்றும் தனாதிகாரி ஆகிய அதிகாரிகளை கொண்டு உருவாக்கப்பட்ட மத்திய மாகாணத்திற்கான நிறுவப்பட்ட மன்றமும் ஆகும்.

இந்நியதிச் சட்டம் சிங்களம், மற்றும் தமிழ் அல்லது ஆங்கில உரைகளில், ஏதேனும் வேறுபாடுகள் ஏற்பட்டால் அதன் சிங்கள உரையே செல்லுபடியானதாகும்.

3- 459

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.